ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 20—10—46 | இதழ் 25

தேவதாஸ் காந்தி



## திக்கற்றதேசம்

உணவுப் பொருள் சம்பந்தமாக இந்திய சர்க்கார் ஒரு ஆராய்ச்சிக்கூடம் அமைக்கத் தீர்மானித்துள்ளனர். எங்கே? பஞ்சாபில்!

விறகு, அதன்மூலம் எரிபொருள் உற்பத்திச் செய்வது, அதைக்கொண்டு பல காரியங்களுக்குப் பயன் படுத்துவது ஆகியவற்றுக்காக ஒரு ஆராய்ச்சிக்கூடம் அமைக்க இந்தியசர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. எந்த இடத்தில்? தான்பாத்!

யந்திர சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சிக்கழகம் துவக்குகிறார்கள் ஜம்ஷட்பூரில்!

ரேடியோ கருவிசம்பந்தமாக ஒரு ஆராய்ச்சிக்கூடம் ஏற்படுத்துகிறார்கள்—இடம்—டில்லி!

ரசாயன சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்படுகிறது. இடம்—கல்கத்தா!

பூதபௌதீக்சாஸ்திர சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சிக்கூடம் அமைக்கிறார்கள்—யார்?—எல்லாவற்றையும் இந்தியசர்க்கார், இந்திய மக்களின் வரிப்பணத்தைக்கொண்டு தான் ஆரம்பிக்கிறார்கள். இந்த ஆராய்ச்சிக்கூடங்கள் அவசியமானவை; இவைகளின்மூலம், விவசாயம், தொழில் இரண்டுக்கும், வளமான யோசனைகளும் சாதனங்களும் பெறமுடியும். ஆனால், எல்லாம், ஏற்பட இருப்பது வடநாட்டிலே தான்! கடைசியாகச் சொன்ன ஆராய்ச்சிக்கூடம், புனாவில் துவக்கப்பட இருக்கிறது.

7-ம் பக்கம் பார்க்க

# படமும் பாடமும்

—:(o):—

தந்தையாரின் கிராமீயக் கோலமும், பழமைப் பிரசாரமும் அவருடைய தனயரும், அன்பர் ஆச்சாரியாரின் மருமகப்பிள்ளையும், பிர்லா பத்திரிகையான "இந்துஸ்தான் டைம்ஸ்" இதழின் ஆசிரியருமானதேவதாஸ்காந்தியைத், துளியும் மாற்றவில்லை. பாருங்கள் தந்தையின் கோலமும் தனயனின் கோலமும் எப்படி வேறமாருக இருக்கிறது என்பதை. பழமையால் புதுமையைத்தடுக்கமுடியவில்லை!

அதுபோலவேதான், எந்தத்துறையிலும் பழமையை நாம் எவ்வளவு பாராட்டிப் பிரசாரம்செய்தாலும், புதுமையைத்தடுத்துவிடப் பழமையால் முடியாது. கைராட்டை தந்தை, நெசவுத்தொழில் விஷயத்தில் இன்று அதற்குமகத்துவம் கற்பித்துப் பிரசாரம் நடைபெறுகிறது, ஆனால் எப்படிப் பழமையைப்போற்றும் காந்தியாரால் அவருடைய திருக்குமாரரின் புதுமைக்கோலத்தைத் தடுக்க முடியவில்லையோ அதுபோலவேதான், கைராட்டையாலும் நவீன நெசவாலைக்குத் தேவையான புதிய கருவிகளைத் தடுக்கமுடியவில்லை. அந்தப்பாடம், கீழே உள்ள படத்தினால் விளக்கப்பட்டிருக்கிறது.

நெசவாலை யந்திரம், சீமையிலிருந்து, இந்தியாவுக்கு அனுப்பப்படும் காட்சி, மேற்படிபடம். மெஷின்கள் வந்துகொண்டுள்ளன.



கைராட்டை



நெசவாலையந்திரம்

காந்தியார்



## ராயலசீமா

ராயலசீமா, ஆந்திராவில் ஒரு பகுதி, இங்கு 1,000,000 ஏகருக்குமேல் பருத்தி பயிரிடப்படுகிறது—ஆனால் ஒரு நெசவாலைகூடக் கிடையாது! எனவே இவ்வளவு பருத்தியும், வெளிநாட்டுக்கும், வெளியாகாணத்துக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது—போர்க்காலத்தில் வெளிநாடுகளுக்குச்சரக்கு அனுப்ப முடியாத காரணத்தால், வாங்குவாரற்று, பருத்தியின் விலை இந்தப்பகுதியில் குறைந்து, பருத்திச் சாகுபடியையே நம்பிவாழும் பலலட்சம் விவசாயிகளைக் கஷ்டத்துக்குள்ளாக்கிற்று. சர்க்கார் நிர்ணயித்தவிலை, கண்டி ஒன்றுக்கு 390-ரூபாய். ஆனால் 130-ரூபாய்க்குக்கேட்பாரற்றுக் கிடந்தது, பருத்தி. இங்கிலையாற இங்கு நெசவாலை துவக்கினால், விவசாயிக்கும் சௌகரியம், தொழிலாளருக்கும் வசதி, ஆலைப் பஞ்சமும் நீங்கும். இதனை மறந்து, மில்கூடாது என்றமுதலமைச்சர் கூறுகிறாரே, இது அடுக்குமா என்று ஆந்திர மாகாண விவசாயசங்கக் காரியதரிசி கேட்கிறார். அடுக்காதுதான்! ஆனால் என்னசெய்வது! பிரகாசம் காருதான்பிடிவாதம் செய்கிறாரே! தமிழ்நாட்டார் தயாரிக்கும் மருந்துக்கு, நோய் மசிகிறதோ, அல்லது மருந்து தேடி அலுத்து, அவர்களும் சும்மா இருந்துவிடுகிறார்களோ, யார்கண்டார்கள்!

# ★ அதோ பண அரசு ★

போர்க்காலத்தில் பணப் பெருக்கம் அமோகமாக ஏற்பட்டது. கண்மூடிக்கொண்டு கண்டவகைகளில் செலவழித்தும், ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்துப் பண்டங்களை வாங்கியும், போட்டியிட்டுக்கொண்டு, வீடுநிலம் ஆகியவற்றின் விலையை ஏற்றி வாங்கியும் இருக்கும் இடத்தை இடித்துக்கட்டியும் பெயர்போனகோயிலுக்கு மீண்டும் போய்வந்தும், பக்திபூர்வமாக ஸ்தலயாத்திரை செய்தும், விசேஷஉற்சவாதிகள் முதலிய காரியங்களைச் செய்தும் பணத்தைச் செலவிட்டனர். பிறகு, இப்படிப் பணத்தைப் பாழாக்குவதைவிட ஏதாவது தொழிலில் போட்டால் வளருமே என்ற எண்ணம் உண்டாயிற்று பலருக்கு. தாமாகத் தொழில் நடத்துவதை விட, வேறு யாரேனும் திறமையும் தகுதியும் வசதியும் படைத்தவர்கள் துவக்கினால், நாமும் அதிலே கொஞ்சம் பணம் போடலாம் என்றநினைப்பு பிறந்தது.

இந்நினைப்பைக் கண்டறிந்த உடனே, செப்படி வித்தைக் காரர்கள் நுழைந்தனர் மார்க்கட்டில்.

ஒன்றுக்குப் பத்தாக இலாபம்வரும் — போட்டியே இல்லாத தொழில் — புதுமுறை யாருக்கும் தெரியாதது—கஷ்டமற்றது—என்று விளம்பரவார்த்தைகளை வீசினர், பணத்தைக் குவித்தனர் புதியபுதிய தொழில்களை ஆரம்பித்தனர் — பங்கு வசூல் செய்து.

இங்கிலாந்திலே முன்பொரு காலத்தில் இப்படிப்பட்ட பணப் பெருக்கம் ஏற்பட்ட போது, காளான்கள் போலக் கம்பெனிகள் கிளம்பி பொதுமக்களிடமிருந்து பணத்தைப் பெற்று, பிறகு இலாபம் வராததால் கடையைமூடி, மக்களின் ஆசையிலே மண்விழச் செய்தனர். விசித்திரமான கம்பெனிகளெல்லாம் துவக்கினார்கள்—எந்தவிதமான ஆசைகாட்டினாலும் நம்ப மக்கள் இருந்தனர் — பணம் பெருகி இருந்த நேரம். ஒரு ஆசாமி, கடல்நீரை சுத்தஜலமாக்கக் கம்பெனி துவக்கினான் —பணம் குவிந்தது. இன்னுமோர் தைரியசாலி, இன்னவிதமான தொழில் என்று கூடச் சொல்லவில்லை, ஏராளமான இலாபம் வரக்கூடிய தொழில்—இரகசியத்தை இப்போது கூற முடியாது—பங்குகளை விரைவிலே வாங்குங்கள் — ஆரம்பதினத்தன்று கூறுகிறேன் கம்பெனியின் இரகசியத்தை என்று சொன்னான்; அதற்கும் பணம் குவிந்தது.

அப்படிப்பட்ட காளான்கள் பூக்கக் கூடாது என்ற காரணம் காட்டி சர்க்கார், பங்குகளை வசூலிக்கும் போக்கைக் கட்டுப்படுத்தி, பழய கம்பெனிகளுக்கு மேற்கொண்டு பங்குப்பணம் சேர்ப்பதானாலும், புதிய கம்பெனிகள் ஆரம்பிப்பதானாலும், சர்க்காரிடம் முன்கூட்டி அனுமதி பெற்றாகவேண்டும் என்று கட்டுப்படுத்தி விட்டனர். இந்தச்சட்டம், நடைமுறையில் என்ன பயனைவிளைவித்தது என்றால், ஏற்கனவே தொழில்துறையிலே வளர்ந்திருந்த வடநாட்டுக்கு மேலும் ஒரு 'சான்ஸ்' அடித்த கதையாயிற்று.

கட்டுப்பாடு செய்தது சர்க்கார்—சர்க்கார் இருப்பதுடில்லியில்—டில்லிக்கும் நமக்கும்வெகுதூரம் — மைல்கணக்கு மட்டுமல்ல குறிப்பிடுவது—மனப்போக்கு விஷயத்தையுந்தான். எனவே, தென்னாட்டவரால், பணப் பெருக்கம் மிகுந்திருந்த அந்தச் சமயத்திலே தாராளமாகப்புதிய கம்பெனிகளைத் துவக்க முடியவில்லை.

மேலும், ஏற்கனவே, முன்னேற்ற மடைந்திருந்த வடநாட்டு முதலாளிகளுக்குத்தான் என்னென்ன புததம் புதிய தொழில்களை அமைக்கலாம் என்ற யோசனை இருந்ததேயொழிய, ஜவுளிக்கடையும் பல சரக்கு மண்டியுந்தவிற வேறு தொழில் என்ன இருக்கிறது என்று எண்ணிக்கொண்டிருக்கும் நம் நாட்டுச் செல்வர்களுக்கு, உருவானபுதியயோசனைகள் தோன்றவில்லை.

தொழில்வளர்ச்சி,விஞ்ஞான வளர்ச்சி, மேனாட்டுத் தொடர்பு இவை இங்கு குறைவு அங்கு அதிகம்; எனவே,பணம்வெள்ளமாகப் புரண்டபோது அவர்களால் அதன் பயனை நன்குபெற முடிந்தது. அந்தக்காலத்துப்பத்திரிகைகளைப்பார்த்தால், (குறிப்பாக இந்துவில்) தெரியும், ஒவ்வொருநாளும் ஒவ்வொருபுதிய கம்பெனி, வடநாட்டில் துவக்கப்பட்டு, அதற்குப் பங்குகோரி இங்கு விளம்பரம் செய்யப்பட்டது. இப்படிச்சமயமறிந்து, சர்க்கார் தங்களுக்கு அருகில் இருப்பதால் ஏற்படும் வசதியைத்துணைகொண்டு, ஏராளமான புதியதொழில்களை வடநாட்டில் துவக்கியுள்ளனர்.

பணம் தாராளமாகக் கிடைத்து விட்டது. உள்நாட்டுத் தொழிலுடன் வெளிநாட்டுத் தொழில் போட்டியிடாதபடி பாதுகாப்பு, சர்க்கார் மூலம், பலதொழில்களுக்குக் கிடைக்கிறது—மேலும் கிடைக்கப்போகிறது — ஆகையால் இலாபத்தைப் பற்றிய பயம் இல்லை—அவைகள் தயாரிக்கும் சரக்குகளுக்கு, நாம் இருக்கிறோம்மார்க்கட்டுஏற்படுத்திக்கொடுக்க! இன்னும் என்ன வேண்டும்!!

இதைத்தான் பணத்திலே "செப்படி" வித்தை என்பது.

போர்க் காலத்தில், அதிலும் 1943லிருந்து 1945 வரையில், புதியகம்பெனிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று, சர்க்காரிடம் வந்தமனுக்கள், சர்க்கார் கணக்குப்படி,

**4,660.**

இவைகளில் 4371 மனுக்கள் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்தும் 289 மனுக்கள் சுதேச சமஸ்தானங்களிலிருந்தும் வந்தன.

பிரிட்டிஷ் இந்தியாவில்,3575 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டன; இந்த அனுமதியின் பயனாக, **228** கோடி ரூபாய் பொதுமக்களிடமிருந்து 'பங்கு' வசூலிக்க உரிமை கிடைத்தது. இதன்றி சுதேச சமஸ்தானங்களில் 209 கம்பெனிகளுக்கு அனுமதி தரப்பட்டு, அதன் மூலம் **33** கோடி வசூலிக்கவழி பிறந்தது. ஆக மொத்தம், 1943 லிருந்து 1945-க்குள் **261**கோடி ரூபாய் மூலதனம் உள்ள, ஸ்தாபனங்கள் அமையவழி பிறந்தது. இவைகளில் மிக மிகப்பெரும்பான்மையான ஸ்தாபனங்கள் எங்கே துவக்கப்பட்டன என்பதைக்கூறவேண்டியதில்லை. இதில் 160 கோடிரூபாய் யந்திரச்சாதனமுள்ள தொழிற்சாலைகள்சம்பந்தமாகவும், 101கோடி ரூபாய், தோட்டம், போக்குவரத்து, வியாபாரம், இன்ஷூரன்ஸ்போன்ற கம்பெனிகளுக்காகவும், அனுமதிக்கப்பட்டவை

என்னென்ன வகையான கம்பெனிகள் துவக்கப்பட்டனஎன்பதை விளக்கக்கொஞ்சம்புள்ளி விவரம் தருகிறோம் — முழுவதுமல்ல—சிலமட்டும்.

| | | |
|---|---|---|
| ரசாயன உற்பத்தித் தொழில் | 508 | இலட்சம் |
| எஞ்ஜினியரிங் | 380 | " |
| நெசவு ஆலைகள் | 375 | " |
| சிமிட்டித் தொழில் | 344 | " |
| சுரங்கத்தொழில் | 309 | " |
| சர்க்கரை | 249 | " |
| சாராயம் காய்ச்சுவது | 172 | " |
| சினிமாப்படத் தொழில் | 110 | " |
| தோட்டத் தொழில் | 113 | " |
| ஆடு மாடு, குதிரைப்பண்ணை | 11 | " |
| பால் பண்ணை | 34 | " |
| இன்ஷூரன்ஸ் | 67 | " |
| வர்த்தகக்கம்பெனிகள் | 161 | " |
| மோட்டார்பஸ் கம்பெனிகள் | 264 | " |
| விளம்பரஸ்தாபனம் | 22 | " |
| நீராவிக்கப்பல் | 439 | " |
| படகுத்தொழில் | 200 | " |
| வீடு கட்டும் கம்பெனி | 55 | " |

இப்படிப் பலவகை. யோசித்துப்பாருங்கள், இந்தவிதமாக, நமது நாட்டில்—நாடு என்பது பிடிக்காவிட்டால், நமது மாகாணத்தில் புதிய புதிய ஸ்தாபனங்கள் எவ்வளவு இருக்கும்? என் அதிகமாக, நமது ஜனத்தொகைக்கோ தேவைக்கோ ஏற்ற அளவில் இல்லை,என்பதை எண்ணிப் பாருங்கள். பணம் தாராளமாகநடமாடிய காலத்திலே, நம்மால் புதியதொழில்அமைப்புகளைப்போதுமான அளவில்உண்டாக்கமுடியவில்லை என்பதை; மறந்து விடாதீர்கள். இனிவரும் காலம்,பணம்வறண்டுகொண்டு வரும் நாட்கள்—கவனப்படுத்துகிறேன், ஏற்கனவே வளர்ந்து வளமாகி உள்ள வடநாடு, இச்சமயத்தைப் பொன்போலப் போற்றிப் பயன்படுத்திக் கொண்டது என்றஉண்மையை, வெறும் வார்த்தை போதாது, உங்கட்குச் சந்தேகத்தைத் தானே ஊட்டும், ஆகவே சில தகவல்கள் தருகிறேன், பாருங்கள், வடநாட்டவர், எவ்வளவு அருமையாகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையும், இனி அவர்களின் புதிய தொழில்களின் பிடியிலிருந்துவேறு, தேய்ந்து வரும் தமிழகம் விடுபடவேண்டும்என்னும் உண்மையையும்.

1945—46 ஆகிய ஆண்டுகளிலேமட்டும் துவக்கப்பட்டு, "இந்து" பத்திரிகையிலே விளம்பரம்செய்யப்பட்ட சில புதிய கம்பெனிகளின் தகவலை மட்டுமே தருகிறேன். யார்வேண்டுமானாலும், அதேபோது,நம்நாட்டில் அதே வகையோ, அளவோ உள்ள கம்பெனியைத் துவக்கவில்லை என்பதை, அதே 'இந்து'வைக்கொண்டே தெரிந்து கொள்ளலாம்.

| பெயர் | இடம் | மூலதனம் |
|---|---|---|
| இந்துஸ்தான் ஜெனரல் எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் | கல்கத்தா | 50,00,000 |
| மால்வா வனஸ்பதி அண்டு கெமிகல்ஸ் லிமிடெட் | இந்தூர் | 60 00,000 |
| பாரத் வெஜிடபில் பிராடெக்ட்ஸ் | கல்கத்தா | 22,50,000 |
| எம்.எஸ். கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் | கல்கத்தா | 25,00,000 |
| பைரீத்ரம் பிராடெக்ட்ஸ் | ஷில்லாங் (அசாம்) | 25,00,000 |
| பெங்கால் விவசாய,தொழிற்சாலை கார்ப்பரேஷன் | கல்கத்தா | 20,00,000 |
| காமினிஎன்ஜினியரிங் கார்ப்பரேஷன் | பம்பாய் | 1.50 00,000 |
| கூச்பிகார் பேப்பர் மில் | கல்கத்தா | 12,50,000 |
| யுனைடெட் பார்ம் (விவசாயப் பண்ணை) லிமிடெட் | புதுடில்லி | 5,00,000 |
| குஜ்தார்கஜோரா (நிலக்கரி) கோல்மைன்ஸ் லிமிடெட் | கல்கத்தா | 75,0000 |

8-ம் பக்கம் பார்க்க

# ★ ரங்கோன் ராதா ★

சௌமியன்.

அலறி ஓடிவந்த என்கணவர், நான் "அடிபைத்யமே! அடி முட்டாள்கள் பலபேர், எனக்குப்பிசாசு பிடித்துக்கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறார்களே, அதுபோலவே தானுநீயும் எண்ணிக்கொண்டாய்?" என்று கூறக்கேட்டுத் தலையில் அடித்துக்கொண்டு, "கர்மம்! கர்மம்!' என்று அழுகுரலிற் கூவினார். மகனே! நான் ஆனந்தம்கொண்டேன், தலையில் அடித்துக்கொண்டது கண்டு. எத்தனை தடவை நான் அதுபோல் அடித்துக் கொண்டிருப்பேன், புருஷன் இருக்கும் நாட்களிலே தலைதலை என்று தலையில் அடித்துக்கொள்வது, அவன் இறந்தால், மாரில் அடித்துக்கொண்டு அழுவது என்றபடி தானே பெரும்பாலான பேதைப் பெண்களின் வாழ்க்கை இருக்கிறது, கொடுமைக்கு ஆளாகும்போது, கட்டினவனால் கைவிடப்படும் பொழுது, காமுகரால் தாக்கப்படும்பொழுது கஷ்டம் தாங்கமாட்டாத வேளைகளிலெல்லாம் பெண்களுக்குத் தலையில் அடித்துக்கொள்வதுதவிர வேறென்ன வழி இருக்கிறது. எத்தனையோ பெண்களுக்கு இந்நிலை. அவ்வளவுக்கும் பரிகாரம் போல எனக்குத் தோன்றிற்று, அவர் என்எதிரே, தலையில் அடித்துக் கொண்டு நின்றபோது. பெண்ணைக் கொடுமைசெய்யும் போக்கினரின் பிரதிநிதி அவர். நான் பெண்குலத்தின் சார்பிலே நின்று பழிவாங்கும் அதிகாரி! இந்நிலைதான் ஏற்பட்டதாக எனக்குத் தோன்றிற்று. அன்றிரவு அவர் அழுதுகூட இருப்பார், நான் கேட்கமுடியவில்லை அந்தச் சங்கீதத்தை, அவர் தெருத்திண்ணைக்குப்போய் விட்டார்.

இந்தப் போராட்டம்சிலநாட்கள் நீடித்தது. போராட்டம் என்று கூடச்சொல்வதற்கில்லை; அவர்தான் கோழையாகி விட்டாரே! என் ஆர்ப்பாட்டம் நடை பெற்றுவந்தது, சிலநாட்கள். அவர் ஏதோ பெரியதிட்டமிடுகின்றார் மனதில், அதனால் தான், இப்படி அமைதியாக இருக்கிறார், அஞ்சி இருப்பவர் போல் காணப்படுகிறார் என்று நான் யூகித்தேன். அவருடைய முகத்திலே கவலைபடியத் தொடங்கிற்று. ஏன் இராது? அடங்காப் பிடாரி நான்! அவர் என்னைக் கொடுமைப்படுத்துவதன் மூலம், என் கோபத்தை மட்டுமல்ல, மனதிலே உள்ள ரோஷத்தைக் கிளப்பிவிட்டார், அதன் வேகத்தைத் தாங்கும் சக்தி அவருக்கு இல்லை. எங்கும் எதிலும் அது தானே நிலைமை! கட்டுக்கு அடங்கும் என்று கருதி நாம் வளர்க்கும் மிருகம், சிலநேரத்தில், அடக்குமுறை, அதனால் தாங்கமுடியாத அளவு ஆகி விட்டால், கட்டு அறுத்துக் கொண்டு ஓடவும், திருப்பித் தாக்கவும் செய்யவில்லையா! அந்த நேரத்திலே, அதற்குமுன் அதே மிருகத்தைக் கட்டுக்கு அடங்கி நடக்கும் படிசெய்தவனே, கிலி கொண்டு ஓடுகிறானல்லவா! மனிதனிடம், மிருக குணம் அடியோடு மாய்ந்து போகவில்லையே! என்பனமட்டுமா? யாருக்கும் தானே, அந்தக்குணம் இருக்கும். மகனே! நான நினைக்கிறேன, உலகிலே எவ்வளவு உபதேசம் நடைபெற்றாலும், இந்த மிருககுணம் அடியோடு ஒழிந்துபோகும் என்று கூற முடியாது. நல்ல முறைகளால், நட்புநியாயத்தால், அந்த மிருககுணத்தைக் குறைக்கலாம், மறைக்கலாம், தூங்க வைக்கலாம், அடியோடு மாய்த்துவிட முடியாது. நான் அடிக்கடி எண்ணிக் கொள்வதுண்டு, வெங்காயம் வெட்டும் போது, இது பார்வைக்குக்கெட்டியான பொருளாகத்தானே இருக்கிறது, தேங்காயையாவது எடுத்துக்குலுக்கிப் பார்த்தால், உள்ளே தண்ணீர் இருப்பது தெரிகிறது, இதனைப்பார்த்தால், அப்படித் தண்ணீர் இருப்பது தெரியக்காணோமே, அப்படி இருந்தும் இதை நறுக்கினால், ஈரம் இருக்கிறதே, எப்படி என்று. ஈரம்மட்டுமா இருக்கிறது தம்பி! நமது கண்களிலே இருந்து நீரைக்கொண்டுவருகிற அளவு எரியும் சக்தி இருக்கிறதே அதனிடம். நெருப்புக்கு உள்ளசக்தியும் நீருக்குஉள்ள சக்தியும் கொண்டு, தனியாக இருக்கும் போது பணம் பயன்படாமலும், மற்றவற்றுடன் பதம்பார்த்துச் சேர்த்தால்சுவையும் மணமும் தருவதுமாக இருக்கிறது வெங்காயம். நான்பெண்களின் சக்தியை அப்படித்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொள்வதுண்டு. வெங்காயச் சாறு கண்ணிலேபட்டால், விழியில் நீர் வழிவதுபோல, பெண்களின் கோபஉணர்ச்சியும் பழிவாங்கும் எண்ணமும்கிளப்பப்பட்டுவிட்டால், எந்தஆணும் அழுது கொண்டுதான் இருக்கவேண்டும்! அவர் அழுது கொண்டிருந்ததிலே ஆச்சரியமில்லை, அவர், என்னுடைய எதிர்ப்பை மட்டும் சமாளிக்க வேண்டிய வேலையில் ஈடுபட்டிருந்தால் கொஞ்சம் சிரமப்பட்டாலும், வெற்றி திட்டமாகப் பெற்று விடமுடியும். அவரோ, என் எதிர்ப்பைச் சமாளிப்பது மட்டுமல்ல, தன் ஆசையை—தங்கத்தைக்கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற திட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டியவராக இருந்தார். நானோ அடங்கமறுத்து விட்டேன். அத்துடன் நின்றுவிட மாட்டேன், ஊர் அறிந்தாலும் கவலையில்லை, உரிமைக்காகப் போராடுவது, கொடுமைக்குச் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டவள்—என் ஆர்பாட்டத்தின் மூலம், நான் அவருக்கு என் புதியநிலையைத் தெரிவித்து விட்டேன். ஆகவே அவர், புதிய திட்டம் வகுத்தாக வேண்டியவரானார். தன் காரியத்தைச் சுலபத்திலே சாதித்துக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்தார். நான் வெற்றி பெற்றுவந்தேன் ஒவ்வொருநாளும். நான் வெளியே போய் வருவேன், அவர் எங்கே போயிருந்தாய் ஏன் போய்வந்தாய், என்றுகூட வும் கேட்கமாட்டார். எனக்கு இஷ்டமான பண்டம் சமைக்கப்படும். இஷ்டமான நேரத்தில் சாப்பிடுவேன். அவருடைய சௌகரியத்தைக் குறைப்பது, சங்கடம் விளைவிப்பது, அதைக் கண்டு சந்தோஷிப்பது, இப்படி ஒரு மனப்போக்கு இருந்தது எனக்கு, சிறு பிள்ளைகள்பொன்வண்டு விளையாடுகிறார்களே அது போல. ஒரு நாள் ஒரு வேடிக்கைகேள். தெருத்திண்ணையிலே யாரோ உள்ளூர்ப்பெரியமனுஷருடன் பேசிக் கொண்டிருந்தார். கலெக்டர் ஆபிசிலிருந்து ஆள்வந்தார்கள், உன் அப்பாவை அழைக்க. உடனே அவர் இதோ பத்து நிமிஷத்திலே, குளித்து விட்டு வந்து விடுகிறேன் என்று கூறினார். அந்தப் பேச்சுகாதில் விழுந்தது. உடனே ஸ்நான அறைக்குப் போனேன், பத்து தடவை இருக்கும், அவர் "இன்னும் முடியவில்லையா ஸ்நானம்? நேரமாகிறதே, கலெக்டர்காத்துக்கொண்டிருப்பாரே" என்று கேட்டுக் கேட்டுப் பார்த்தார். என்னிடம் கேட்பாரா! வேலைக்காரியிடம். அவள் என்னிடம் எப்படிப் பேசுவாள் "அம்மா! அம்மா!" என்று அவள் கூப்பிடுவாள், நான் தண்ணீர் ஊற்றிக் கொள்ளும்சத்தந்தான் அவளுக்குப்பதில்; கதவைத்தட்டுவாள்.

"யாரது முட்டாள்தனமாக, ஸ்நான அறைக்கதவைத் தட்டுவது" என்றுபதில்.

"ஐயா..........." என்றுஅவள் பேசத் தொடங்குவாள்,

"என்னடி அக்ரமம்! ஒரு பெண் குளித்துக்கொண்டிருக்கும்போது அவர் எப்படித்தட்டலாம்" என்று கேட்பேன், எனக்குத் தெரியும், அவள்தான் தட்டினாள் என்று.

"அம்மா! நான் தான் தட்டினேன் அவரல்ல, அவர்கலெக்டர் ஆபீஸ் போகவேணுமாம்" என்று அவள்கூற, "அதற்கு உத்தரவு கேட்கிறாரா என்னை" என்று நான் கேலிபேச, "இல்லையம்மா, குளித்து விட்டுப்போக வேண்டுமாம்" என்று அவள் பேச. "சரிதாண்டி! பாதிக்குளியலோடு வந்துவிடமுடியுமா" என்று நான் கோபிக்க, எங்கள் பேச்சைக்கேட்டு, அவர் திகைத்து விட்டுக் கடைசியில், குளிக்காமலேயே, அவசர அவசரமாக உடுத்திக்கொண்டு போய் விட்டார். வேலைக்காரி, ஒரு "ஜோபாவம்" சேர்த்துச்சேதியைச் சொன்னாள்; களித்தேன்—குளித்தேன் என்றுமட்டுமா, கூற முடியும் அந்தஸ்நானத்தை!!

(தொடரும்)

In the Court of the Dt., Munsiff of Conjeeveram.

O. S. 139/46

—

வாதி

ரத்தின முதலியார்

பிரதிவாதிகள்:—

1. மொழுரப்பநாயகர் 2. சுப்பிரமண்யநாயகர் 3. பூங்காவன நாயகர் 4. சுப்பிரமண்ய நாயகர் 5. வீ. குப்புசாமி அய்யர் 6. வீ. எஸ். சர்மா 7. வி. ராஜாராம் 8. வி. சுப்பம்மாள் 9. கன்னய்யா 10. மைனர் ராஜம்மா 11. மைனர் சீதாராம்.

10, 11, மைனர்பிரதிவாதிகளுக்கு கார்டியன தாயார் 8-ம் பிரதிவாதி

Notice

5முதல்11 வரைபிரதிவாதிகளா[illegible] வீ. குட்பசாம அய்யர் வகையற வாதிக்கு 6—4—1940ல் எழுதி கொடுத்திருக்கும் பங்கு நிலத்தில் கண்ட சுரோத்ரியம் கீழ்போமல்லூர் கிராமத்திலுள்ள பைமாஷ் 66—[illegible] அடங்கிய 0—11—2 காணி, அதிலுள்ள புளியமரம் விஷயமாய் பிரதிவாதிகள்பேரில் வாதி தாவா செய்து 22—10—46-ல் வாய்தா போட்டிருப்பதால் ஆக்ஷேபனையுள்ளவர்கள் டை தேதி 11-மணிக்கு கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும்.

K: கிருஷ்ணசாமி அய்யங்கார்,
வாதி வக்கீல்,
காஞ்சிபுரம்,
17—10—46.

## வேதனை

5-ம் பக்கத் தொடர்ச்சி

வேலைசெய்யக்கூடிய மாயாவிகள், நீரிலே மட்டும் 54 கோடிபேர் இருக்கிறார்கள்! இவர்களை அழைப்பது விஞ்ஞானியின் வேலை. இவர்கள்வருவதைத்தடுக்கக்காட்டையைச்சுழற்று, உலக்கைக்கைத் தூக்குஎன்று தவக்கிறார் போர்! இதுமுறைமா, சரியா?

நீரிலே இருந்து பெறுகிற சக்தி போல நிலக்கரியிலிருந்து பெறலாம், நிலக்கரிகொண்டு நெருப்புண்டாக்கி அதன்மூலம் கிடைக்கும் சக்தியையும் ஆவியையும்கொண்டு. அதுமட்டுமா! பூமியைத்தோண்டினால், பாதாளத்திலிருந்து ஆவி கிளம்புகிறது—அதற்கு சக்தி இருக்கிறது—அதைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது—இத்தாலியில் 4000 குதிரைஓட்டமுள்ள மின்சார சக்தி இப்படி, பாதாளத்திலிருந்து கிளம்பும் ஆவியைக் கொண்டு பெறப்படுகிறது. இதுமட்டுந்தானா? கதிரவன் காய்கிறானே, அவனுடைய வெப்பத்தையும் வேலை வாங்கமுடியம்! வேலை வாங்கும் திட்டத்தைக்கண்டு பிடிக்கிறார்கள். சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரசக்தியைக் கொண்டு, ஒருசின்ன மின்சார மெஷினை நடத்திப் பார்த்தார்கள், பரீட்சார்த்தமாக, ஆராய்ச்சி மேற்கொண்டு நடந்து வருகிறது. இந்த நாட்களிலேதான், மெஷின்கள் கூடாது என்றபேச்சுப் பேசப்படுகிறது, அதன் ஆரம்ப அத்யாயமாக, ஆலை வேண்டாம் என்றுஆளவந்தவர் கூறுகிறார், நாடு கேட்டுக்கொண்டிருக்கிறது.

—

## டில்லியில் லீக்

## அடுத்த வாரம்

திராவிட நாடு

காஞ்சி] 13—10—46 [ஞாயிறு

# நம்மோடு கலந்துவிட்டார்

★

பால் வடியும் வதனம், பார்ப்பவரைச் சொக்கிடச் செய்யும் பார்வை, அரும்பு மீசை, அதைத் தாங்கியும், தொடர்ந்தும் புன்னகை இழைத்த பொன் அதரம், காதளவு நீண்ட கவர்ச்சி மிக்க கண்கள், காண் போரை நண்பர்களாக்கிவிடும் ஓர் மோகன சக்தி, இவ்வளவும் கொண்ட எழில் உருவம், இலட்சிய புருஷன் கொங்கு நாடு நமக்குத்தந்த தங்கம், பழைய கோட்டையின் புதிய வீரன், பயமறியாப்பரம்பரையில் உதித்ததிறன், தமிழகத்தின் தோழன் அர்ஜுனன், மறைந்து விட்டார். சலிப்பெனும் காரிருள் சூழ்ந்திருந்த வேளையிலே, நமது கட்சிக்கோட்டத்திலே, கண்டோம் அந்தச் சுந்தரபுருஷனின் உருவை. கம்பீரமொழி கேட்டோம், கவலையைத் துடைத்துக் கொண்டு எழுந்தோம், பெற்றோம் ஓர் மாவீரனை இனிப்பயமில்லை, ஜெயமுண்டு மனமே என்று கூறினோம்; நாலைந்து ஆண்டுகளாக அந்த வீரன் ஆற்றிய அரும்பணியும், அவருடைய அறிவாற்றலும் அதனை விடமேலான அவருடைய அன்பும் நாற்பதாண்டு கட்சிப்பணி புரிந்தும், பலரால் அடைய முடியாத இடத்தில் அவரைக் கொண்டு சேர்த்தது. எத்தனையோ வீரர்கள் வந்தனர், சென்றனர்—இருந்தனர்—இருக்கின்றனர். பெரும் பான்மையோர், நமது பார்வையில் படும் உருவங்களாக மட்டுமே இருக்க முடிந்தது. அர்ஜுனன், நமது இதயத்தில் இடம்பெற்றுவிட்டார். நெடு நாட்கள் நம்முடன் இருந்தல்ல. வந்தார், புன்னகையை வீசினார், அவருடைய கண்களினின்றும் கனிவும், வீரமும், ஒளியென வெளிப்படகின்றார்; நமது இதயத்தைத் தட்டினார், குடி ஏறிவிட்டார்! இப்படி நம்மை வென்ற கட்சிப் பணியாளர்கள் அதிகம் பேர் இல்லை. நாம் பாராட்டியிருக்கிறோம் பலரை. சிலரைவணங்கி இருக்கிறோம். சிலரிடம் மதிப்பு வைத்திருக்கிறோம். சிலரைக் கண்டு வியந்திருக்கிறோம், இன்னும் சிலரிடம் நேசமாகநடந்து கொண்டிருக்கிறோம். ஆனால் மனதைப்பறிகொடுத்தது இந்த மாவீரனிடந்தான்! அவருடைய வருகை தென்றலின் வருகையாக, திங்களின் வருகையாக இருந்தது, திகைத்து இருந்ததமிழகத்திற்கு. மாளிகையிலிருந்து தான் கிளம்பினார், நாம் காட்டிய மண்மேடுகளெல்லாம் உழன்றார்; சோலைக் குயிலையும், மாலைமதியையும் ஆடும் மயிலையும் கண்டு களிப்பெனும் மது உண்டு வாழ்வதற்கேற்ற இடம் — அங்கிருந்துகிளம்பினார்—கல்வீச்சு மண்வீச்சு கருத்தறியாதாரின் சொல்வீச்சு இவைகள் நிரம்பிய இடத்துக்கு அழைத்தோம், ஆர்வத்துடன் வந்தார், நமக்கு ஆர்வம் தரும் அளவு கட்சியில் பற்றுக் கொண்டார். நாலு ஆண்டுகளிலே நம்மை எல்லாம் தமது நண்பர்களாக்கிக்கொண்டார்; வீரனின்விழியும்மொழியும் விளங்கிடும் வகை எவ்வண்ணமிருக்க வேண்டுமென்பதைக் காட்டினார் அந்தோ! மறைந்தார்.



அர்ஜுனன் மறைந்தார்—ஆம்—அர்ஜுனனுக்கு உடல் நலம் இல்லையாம் என்ற செய்திகூடத் தெரியாததமிழகத்துக்கு. திடீர்த் தாக்குதல், மின்னல்வேகத்திலே மரணம், எதிர்பாராத இடி, நமக்கு—நமது இருதயத்துக்கு.

விண்ணில் சென்று கொண்டிருந்த விமானம், ஓமான்கடலருகே வீழ்ந்ததாம் என்று அன்றோர் நாள் கிடைத்ததே நம் ஆவியைத் தாக்கும் செய்தி, அது போன்றது இந்தச்செய்தி—நமது அர்ஜுனன்—மறைந்தாராமே—மறைந்தாராமே—என்று. நமக்கே, எப்படி இதனைக்கூறுவது—இப்படியும் இருக்குமா என்ற சந்தேகம் தோன்றும் அளவு சடுதியில், கிளம்பிவந்தது செய்தி. பசும்புற்றரையிலே, பாதித் தூக்கத்துடன் படுத்திருக்கும் வேளையில், மலர்ப் புதரருகிருந்து மறைந்துவந்து நாகம் தீண்டியதுபோல, தேனைப் பருகிவிட்டு, தீந்தமிழ்ப்பாடலைக் கேட்டுக்கொண்டிருக்கும் நேரத்திலே, விண்ணும் மண்ணும் அதிர, வெடியொன்று கேட்டு, நொடிப்போதில் இறப்பது போல, வெற்றிப் பாதையிலே வீறுகொண்டு நடக்கும்போது காலடியில் பிளவுகண்டு, பூமியடியில் புதையுண்டது போல, பால்வண்ணநிலவுகண்டு வெண்மணலைக்குவித்து விளையாடிக் கொண்டிருக்கும் வேளையிலே, எங்கிருந்தோ வெள்ளம்புரண்டு வந்து கொன்றது போல, கோவை மாவட்டக் குறுநில மன்னன், திராவிடப் பூங்காவுக்குப் பணிபுரியக்கிளம்பியவீரன், கோவை சென்றான் கூட்டம் நடத்த, திருப்பூர் சென்றான் நிதி திரட்ட, சென்னைவந்தான் நண்பர்களைக்காண, என்னைக்கண்டான் இன்பமொழி புகன்றான், அன்றுவந்தான் இன்பப்பூமாலை சூட்டி அகமகிழ்ந்தேன், நாளை வருவான் நமதூரில்பேச, எங்கும் வருவான், எவர்க்கும் அஞ்சான், கொள்கையில் பிறழான், கோட்டம் அமைப்பான், வெற்றிக்கொடி ஏற்றிவைப்பான், என்று நமது தோழர்கள் நாலா பக்கங்களிலும், எந்தநண்பனைப் பற்றி, நாவார அல்ல, மனமார மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தனரோ, மகிழ்ச்சியுடனே பெருமையும் அடைந்தனரோ, அந்த நண்பன், மறைந்தான் என்ற சொல்கேட்டு, வில்காணாநேரத்தில் விடுகணைதாக்கி வீழ்ந்தவனின் வேதனையைப் பெற்றனர். இந்தவேதனை போக்கமுடியாதது—மனஅதிர்ச்சி மாற்றமுடியாதது — தாக்குதல் நமது உளத்தைத் தகர்க்கக்கூடியது—நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது—ஆம்!—ஈடுசெய்ய முடியாது. கொங்கு வேளாளக்குடியிலே, இத்தகைய வீரனின் தொண்டு இனி நமக்குக் கிடைக்குமா!—ஏக்கம் மட்டுமேபதில்! பெருமூச்சும், கண்ணீரும் தான் பதில்! வேறுபதில் இல்லை—ஏது! எதை எண்ணி ஆறுதல் பெற முடியும்? நண்பர் நாற்பதாம் ஆண்டைக் கடந்தார், நடுத்தர வயது அல்ல, முதுமைக்கு முற்றம் அவ்விடம். அங்கு சென்ற பிறகு மறைந்தார் — துக்கம் தான், ஆனால் துடைத்துக்கொள்வோம், என்று கூறமுடியுமா? ஆருயிர்நண்பன் அர்ஜுனன் இருபத்தினான்கு ஆண்டுக்குமாரனாயிற்றே! அவனையன்றோ இழந்தோம்—அந்தோ! ஆறுதல் பெற எதனையும் துணைக்கு அழைப்பதற்கில்லையே!

ஆறுதல் பெற ஒரேவழிதான் உண்டு—இதயத்தில் குடிஏறிய அர்ஜுனனை, அங்கேயே இருக்கவைப்பது மட்டுமல்ல— அவர் அங்கு என்றும் இருப்பார்—அங்கு இருப்பது மட்டுமல்ல— அவருடைய வாழ்க்கையின் இலட்சியமாக விளங்கிய தனித்தாயகத் தமிழ்அரசுரிமையைத் திராவிடம் பெற்றதும், நாம், அந்த அரசமன்றத்திலே, அவர்தம் அழகுசிலையை அமைக்கவேண்டும். இன்று திராவிடன், கண்ணீரையும் துடைத்துக்கொள்ளாமல்நின்று அந்த மறைந்த வீரனின் மீது கொண்ட பற்றினைத் துணைகொண்டு; சூள் உரைத்திட வேண்டும் — "ஆற்றலரசனே! ஆருயிர் நண்பனே! அர்ஜுனனெனும் எமது அண்ணலே! நீமறைந்தாய்! செல்வம்மறைந்தது போல்! மறவோம் உமது நினைவினை—எமது உள்ளத்தில் குடி ஏறிவிட்டாய்—குமரா! நீ இறக்கவில்லை— நீமறையவில்லை! இதோ இருக்கிறாய் எம் அகக்கண்ணின் முன்னே— என்றும் இருப்பாய் எம்முடன்—திராவிடத்தனி அரசு துவக்கும் நாளன்றும் இருப்பாய்—அதற்கானவேலை இருக்கிறது என்ற ஒரே எண்ணத்தைத்தான், ஆறுதலுக்கு மருந்தாகக் கொண்டுள்ளோம்— நீ துவக்கியபணியினைமுடிப்போம்" என்றுஉறுதியுடன் கூறவேண்டும் மனதில் திடம் கொள்ள வேண்டும்.

ஓராண்டுக்கு முன்னம் தந்தையை இழந்தார்—இன்று தம்பியை—அப்பா! பழையகோட்டைப்பட்டக்காரர் — அர்ஜுனனின் அண்ணார் அடைந்துள்ள வேதனைக்கு, உவமை கூறமுடியாது. அவருக்கு ஆறுதல் கூறுவது ஆகாத காரியம் — இதோ தமிழகம் கண்ணீர்பெருக்குடன் நிற்கிறது காணீர்! என்று கூறுவதன்றிவேறில்லைகூற. மறைந்த மணியின் துணைவியாரின் துயரையும், அவருடைய குழந்தைகளின் நிலையையும், குடும்பம், உற்றார் உறவினர், கொங்கு நாட்டுப் பெருங்குடியினர், ஆகியோர் அடைந்துள்ள ஆருத்துயர் அளவிடமுடியாதது. நமது அனுதாபம் அவர்கட்கெல்லாம்—அழுகுரலில். மறைந்த அர்ஜுனன், மறையவில்லை, நமது மனதிலே இருக்கிறார், மனையில்காணப்படமாட்டார், மன்றமேறிப் பேசமாட்டார் ஆனால் அவர் இதோ, இங்கே இருக்கிறார். இனியமுகம் இதோ தெரிகிறது, அன்புமொழி கேட்ட வண்ணம் தான் இருக்கிறது, நம்மோடு இருக்கிறார்—நம்மில்கலந்து விட்டார்—இதுவே இன்று நிலைமை—உண்மையும் இதுவே.

●

**நெசவுத் தொழில் பாதுகாப்பு மாநாடு, சென்னையில் நவம்பர் 5-ல் நடைபெறும்.**

## வேதனை

6-ம் பக்கத் தொடர்ச்சி

பாதை! நாம் பழங்காலம் பெறுவோம்!' என்று. சரியா, தவறு? என்பதுகூட அல்ல என்கேள்வி, அவருக்கு அது சரி என்று தோன்றுகிறது— அவர் மனப்போக்கு அது. நாட்டின் முன்னேற்றத்துக்கு அது உகந்ததா? மக்கள் முழுவாழ்வுபெற அதுவா வழி? இதைத்தான் யோசிக்க வேண்டும். வாழ்க்கைக்காக நடைபெறும் போராட்டத்திலே மனிதனுக்குப்புதிய பலத்தையும் வசதியையும் தரும் சாதனம்விஞ்ஞானம். அது கூடாது என்ற தத்துவத்தின், ஒருதுண்டுதான், ராட்டைப்பிரசாரம். இந்த நெசவாலைமட்டிலுந்தான் இன்றுகண்டிக்கப்படுகிறது, இதே சமயத்தில் சென்னை சர்க்கார், பெரிய தொழிற்சாலைத் திட்டங்களை நிறைவேற்றப்போகிருர்கள் என்றுமுதலமைச்சர் கூறுகிருர். ஏன், மற்றவற்றுக்கு விஞ்ஞான சாதனத்தை யந்திர வசதியை உபயோகிக்க விரும்பும் இவர், நெசவு விஷயமாகமட்டும், கைராட்டைக் காலத்துக்கு, நாடு—நம்நாடு—போகவேண்டும்என்று கூறுகிருர்! இதற்குப்பொருத்தமான ஓர்சமாதானம் அவர் கூறவில்லை; கூறமுடியாது. இன்று துவக்கப்படும், மில்ஒழிப்புத்திட்டம், படிப்படியாக, எல்லாவற்றுக்கும் பரவிவிடும், தடுக்கமுடியாது, ஆரம்பத்தில் தடுத்தாலொழியப்பிறகுவிஞ்ஞானத்தைச் சகல துறையிலிருந்தும் விலக்கவே முயற்சிநடக்கும். இதற்கு அறிகுறியும் தோன்றிவிட்டது. பெரியபிரச்னையிலே மக்கள் இன்று ஈடுபட்டிருப்பதால், இந்த அறிகுறியைக்காணநேரம் இல்லை. மில்களை ஒழிக்கத்திட்டமிடும் முதலமைச்சர், இதே நேரத்தில், அரிசி மில்களையும் ஒழிக்கத் திட்டமிட்டிருக்கிருர்—புதிய அரிசிமில்கள் இனித்துவக்கப்பட அனுமதி கிடையாதாம். ஆடைக்குக் கைராட்டை, அரிசிக்கு உலக்கை! இரண்டாம்படி வந்தாயிற்று!! இனிப் படிப்படியாகப்போகவேண்டியதுதானே; அகல்விளக்கு, ஏடு எழுத்தாணி, தேடவேண்டும்,காடுமேடுகளில் குடி இருக்கவேண்டும்,

விஞ்ஞானத்தின் ஜொலிப்பை மட்டுமல்ல, அதன் பலனை மனிதசமுதாயம் பெற்ற நவீன உழைப்பு மிச்சப்பட்டதை, கடினம் குறைக்கப்பட்டதை உணர மறுப்பதால் விளையும் போக்கு இது.

வெளிநாட்டவரோ, மனிதனின் உழைப்பின் சக்தியைச் சுறண்டும்முறையைக்குறைத்து, நீர், நெருப்பு, காற்று, மின்னொளி, முதலிய இயற்கைச் சக்தியைப்பயன்படுத்தி, உழைப்பைக்குறைத்துக் கொண்டுள்ளனர்—இன்னும் புதியபுதியமுயற்சிகள் நடைபெற்றபடிஉள்ளன.

சாதாரணமாக, நீராவியிலோ,மின்சாரத்தாலோ, இயங்கும் மெஷின் இன்று, தண்ணீர் இறைப்பதுமுதற்கொண்டு,ரயில் வரை உபயோகமாவதைப்பார்க்கிறோம். மூன்று குதிரை ஓட்டமுள்ள மெஷின், (3 H. P.) 5 குதிரை ஓட்டமுள்ள மெஷின் என்று கேள்விப்படுகிறோம். தோட்டங்களில் பார்க்கிறோம், தொழிற்சாலைகளில் காண்கிறோம். என்ன இதன்பொருள்? மனிதன் உடல் தேயஉழைக்கும்கொடுமையைக் குறைக்க மனிதரில் மதிமிகுந்தவன், தந்தநிதி அது. அதுநமக்குப் பயன்படக்கூடாது என்கிருர் முதலமைச்சர். நீதியா, என்று யோசியுங்கள். ஒருகுதிரைஓட்டமுள்ள மெஷின் என்ருல்,என்ன பொருள்? 20 மனிதரின் சக்தி, அந்த ஒருமெஷினுக்கு இருக்கிறது. அந்த ஒருமெஷினை உபயோகிப்பதன்மூலம், இருபது மக்களின் உடல்தேய்வு தடுக்கப்படுகிறது—உடல் தேய்வுமட்டுமல்ல, அவ்வளவுபேரும் பாடுபடும்கால அளவும் குறைக்கப்படுகிறது.

காலையில் கோழி கூவியதும் எழுந்திருந்து, கொட்டாவி விட்டுக்கோலும் குடமும் எடுத்துக்கொண்டு தோட்டக்காடுபோய் ஏற்றம் ஏறி, தண்ணீர் இறைக்கும் உழவன், ஒருநாள் பூராவும் உழைத்து எவ்வளவு அளவுதண்ணீர், பாய்ச்சமுடியுமோ அதுபோல எவ்வளவோ அதிகமான மடங்கு அளவு தண்ணீர், ஒரு மெஷினைக்கொண்டு இறைக்க முடிகிறது. 20 மனிதரின் உழைப்பு, ஒருகுதிரை ஓட்டம் உள்ளசின்னஞ்சிறுமெஷினுக்கு இருக்கிறது. இந்தச் சாதனங்களை இழக்கவேண்டுமா? ஏன்? மனிதன் மிருகமாக உழைக்கத்தான்வேண்டுமா? ஏன்? இயற்கைச்சக்திகளை விஞ்ஞான அறிவுடன் பயன்படுத்திக்கொள்ள ஏன் மறுக்கவேண்டும்! அதிலும் வெளிஉலகு எங்கும் காற்றைக் கனலை, நீரையும்நிலத்தடிகிடைக்கும் பொருளையும் கொண்டு 'சக்தி'களை உற்பத்தி செய்து, மனிதவாழ்வின் வேதனையைப் போக்கி இருக்க, அதைக்கண்கூடாகக்கண்டான பிறகும், அவை ஆகாது என்று கூறுவது எவ்வளவு கொடுமை. எங்கே கூறினர் என்று கேட்பர் அன்பர்கள். கூறுவது ஏன்! செய்தே காட்டுகிருர்களே! ஆடைக்கு ராட்டை! அரிசிக்கு, உலக்கை! ஆணுக்குச்சுற்றும் வேலை!பெண்ணுக்குக் குத்தும்வேலை! இதற்கு ஆளும் வேலை, பிரகாசத்துக்கு! அறிவுடைமையா இது? என்று கேட்டாலோ, ஆத்திரமுடையோர் ஆர்ப்பரிக்கின்றனர். முறையா இது!

நீரிலே நெருப்பு இருக்கிறது என்பதைக்கண்டறிந்த விஞ்ஞானிகள், நீரோட்டத்தை இன்று மனித வாட்டத்தைக் குறைக்கும் சாதனமாக்கினர். மந்திரத்தின் துணை கொண்டல்ல, மாகாளி அருள் கொண்டல்ல, மதியின் துணைகொண்டு. நீரின் ஓட்டத்திலே பிறக்கும் சக்தியைக்கொண்டு, பிரமாண்டமான யந்திரங்களைஇன்று இயக்கச்செய்து,அவைகளைக்கொண்டு இலட்சக்கணக்கான மக்கள் பாடுபட்டுச் சாதிக்கவேண்டிய காரியத்தைச்செய்து முடிக்கின்றனர், மனித உழைப்பும் மிச்சமாகிறது, காலமும் சூறையாடப்படாமலிருக்கிறது, பலனும் அதிகமாகிறது. மேட்டூர் எங்கே இருக்கிறத, கோலார் எங்கே இருக்கிறது. மலை, மேட்டூர்! கோலார், பாதாளம்! மலைமேல் இருக்கும் நீரைக்கொண்டு, பாதாளத்தில் பட்டப்பகல் போலாகச் செய்யும் மின்விளக்குகள் போடப்பட்டுள்ளனவே, இதைவிட அற்புதம்வேறுஎன்ன வேண்டும். பாதாளலோகம் போனன் பார்த்திபன், அங்கு நாககன்னியைக் கண்டான், காதல் கொண்டான் என்று படிக்கக் கேட்டுப் பரவசமடைகிறோம், இதோபார்த்துக் கொண்டிருக்கும் போதே,கண்ணன் இல்லை, அவன்கைக்குழல் இல்லை, பார்த்திபனல்ல,பாணம் விடுவதில்லை, வானத்திலேபொழிகிறநீர், வயலைக்குளமாக்கிப்பின்னர் புரண்டோடி ஆருக, அதன் வெள்ளத்தையும் ஓட்டத்தையும் அறிவால் அணையிட்டு தேக்கமாக்கி, தேக்கியநீரைத் தேவையானபோது தேவையான அளவு தேவையான இடத்துக்குஅனுப்புவதுடன், தேக்கத்தின்மூலம் நீரோட்டசக்தியைக் கொண்டு பெரிய மெஷின்களை இயக்க வைத்து. மெஷின் இயங்குவதன் மூலம், மின்சாரசக்தியை உண்டாக்கி, அந்தச்சக்தியைக் கொண்டு, நெடுந்தூரம், ஒளி தருகிருர்களே, இது எவ்வளவு அற்புதமானகாரியம்! அற்புதம் கிடக்கட்டும், எவ்வளவு பெரிய வெற்றி, அறிவுக்கு! வெற்றி கூடக்கிடக்கட்டும், எவ்வளவு வேதனையான உழைப்பை, இதன் மூலம் குறைக்கமார்க்கம் கிடைத்தது-

பம்பாயில், டாட்டா கம்பெனியார், நீரைத்தேக்கி, நீரோட்டசக்தியைக்கொண்டு, இன்று பம்பாய்க்கு ஒளிதருகிருர்கள். மேற்குத்தொடர்ச்சிமலைகளில் புரண்டோடி வரும் நீரை,பெரியதேக்கங்களாக்கி, 230,000 குதிரை ஓட்டமுள்ள மின்சாரச் சக்தியை உற்பத்திசெய்கிருர்கள். அதாவது 4600000 மனிதர்களின் உழைப்பு, அவ்வளவு மனிதர் இல்லாமல், உண்டாக்கப்படுகிறது.

நாற்பத்து ஆறு இலட்சம் மக்களின் உழைப்பின் அளவுள்ள சக்தி, மலையிலே, புரண்டுஓடிக்கொண்டிருந்தது தண்ணீராக! இதுவரை, நமது கவிகள் காஞற்றின் சலசலப்பையும் வெள்ளத்தின் வேகத்தையும் பாடினர்! ஓவியர்கள், படம் தீட்டினர்! வேதாந்திகளோ, அந்த வெள்ளத்தின் வேகத்தில் சிக்கினவன் எப்படிக் கரை சேரமுடியாமல் அழிந்துபடுவனே, அதுபோலப் போகபோகாதிகளிலே மூழ்கினவன், அழிவான் என்று பயம் காட்டினர், ஆனல், அதன் பலத்தை, அதுகட்டுக்கு அடங்கும் என்ற எண்ணத்தை, அதனை அடக்கி ஆளலாம் என்ற ஆசையை, அடக்கி ஆள்வதன் மூலம், அபாரமான பலன் பெறலாம் என்ற திட்டத்தை யார்சொன்னர்கள்! யார் செய்து காட்டினர்கள்! விஞ்ஞானம் இதோ, ஓடும் நீரிலே 46 இலட்சம் மக்களின் சக்தி இருப்பதைக்கண்டு, கொடுத்தது. பம்பாய் நகருக்கு விளக்குப் போடுகிருர்கள் இந்த 46-இலட்சம்மக்கள், இவர்களே 53-நெசவாலைகளை ஓட்டுகிருர்கள், பம்பாயிலிருந்து பூனுவுக்கு ஓடும் ரயிலை ஓட்டுகிருர்கள். ஒரு ஆளாவது கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள்! ஆனல்ஓயாது வேலைசெய்து கொண்டிருக்கிருர்கள், 46 இலட்சம் மக்கள்—பிரம்மாவின் சிருஷ்டிகளல்ல, ஆற்றிலேயிருந்து அறிவு எடுத்துத்தந்த மாயாவிகள்! இஷ்டப்படி சுற்றிக்கொண்டு, எதுப்பாராற்றுக் கிடந்தவர்கள், இன்று, ஏவினதைச் செய்கின்றனர்! இந்தகைய நீரோட்ட சக்தியைக்கொண்டு மனிதன் பயன்படுவது நல்லதா, கைராட்டை கைஉலக்கைக்காலத்துக்குப் போவது நல்லதா என்று யோசிக்கவேண்டுகிறோம். யார்போக விரும்புவார்கள் காட்டுக்காலத்துக்கு என்று கடுங்கோபத்துடன் கேட்கும் காங்கிரஸ் அன்பர் மனக்கண்முன் தெரிகிருர். "கோபியாதே நண்பா! இன்று ஆடைக்கு ஆலைவேண்டாம் அரிசிக்கு மெஷின் வேண்டாம்என்று ஆரம்பமாகிறது, இதை அனுமதித்தால், பிரயாணத்தின் முடிவு, காட்டுக்காலந்தான், என்று கூறவிரும்புகிறோம்.

இந்தியா பூராவிலும் சேர்த்து இன்று 1,5000,000 குதிரை ஓட்டமுள்ள மின்சாரசக்தி பயன்படுத்தப்படுகிறது, அதாவது 30000000 மக்கள் செய்யவேண்டிய வேலையைமின்சாரசக்தி செய்கிறது,

மூன்று கோடி மாயாவிகள், இதுபோலப் பலப்பல கோடி மாயாவிகள்! இன்னும் உள்ளனர், மறைந்துகொண்டு, நீராய், நெருப்பாக, நிலக்கரி ரூபத்தில்! விஞ்ஞானம் அவர்களைத் தேடிக்கண்டுபிடித்து வருகிறது, நமக்காக வேலைசெய்ய, நமக்குத் துணைசெய்ய. இப்படி நமக்கு வேலை செய்யக்கூடிய மாயாவிகள், எவ்வளவுபேர் கிடைக்கக்கூடும் என்றுவிஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர் தெரியுமோ! நீரிலே விளையாடிக்கொண்டிருக்கும் மாயாவிகள் மட்டும் 54 கோடிபேர். இந்தியாவின் ஜனத்தொகை 40 கோடி, அவர்களுக்கு

(3-ம் பக்கம் பார்க்க)




ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி,புளித்தேப்பம்,வயிற்றுப்பிசம் குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

## வேதனை

7-பக்கத் தொடர்ச்சி

றது. இதன்பொருள் என்ன? பொதுவாக, மனிதனின் உழைப்பு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான்.

சென்னை போன்றநகர்களிலே இன்றும், "பாரமான" சாமான்கள் ஏற்றப்பட்ட வண்டியை இழுத்துச் செல்லும், பாட்டாளியின் பரிதாபத்தைக் காண்கிறோம்- அவன் தள்ளிச் செல்லும் பாரவண்டியில்ஏற்றப்பட்டுள்ள சாமானை விட அதிக கனமும் அளவும் கொண்ட சாமான்களை ஏற்றிக்கொண்டு, ஒரே மனிதன் நிழல்படஉட்கார்ந்து கொண்டு ஓட்டும் "லாரி" எடுத்துச்செல்வதைக் காண்கிறோமல்லவா! கைவண்டி, மனிதனைமிருகமாக்கி விடுகிறது—"லாரி" மனிதனை மனிதனுக்கி வைக்கிறது! அந்த "லாரி" விஞ்ஞானத்தின் சிறு சின்னம்—அதுவந்திரா விட்டால், வியர்வைபொழிய, மேனிகருக்க, இரத்தம் சுண்ட, எலும்புமுறிய இழுக்கிறோனேகைவண்டி, அதைப் போலவேறுபலகைவண்டிகளில் சாமான்களை ஏற்றிக் கொண்டு, வேறுபலர், வேதனையுடன் இழுத்துக்கொண்டு போகவேண்டும். அந்த வேதனையை விஞ்ஞானம் குறைத்தது. இதுபோல், மனிதன் பாடுபட்டுச் செய்து வந்த எவ்வளவோ காரியங்கள், யாகயோகாதிபலனல் அல்ல, சித்து தெரிந்ததால் அல்ல, தேவானுக்கிரகம்பெற்றதால் அல்ல, 'மையின்' மகிமையால் அல்ல, யாரோ சிலர், மக்களின் வேதனையைக்கண்டு மனந்தாளாமல், அந்தவேதனையைக்குறைக்கமுடியாது சகித்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று குருமார்கள் கோயில்களிலே ஜெபமாலையை உருட்டிக்கொண்டிருந்தபோது, சிந்தனையில் ஈடுபட்டு ஆராய்ந்து ஆராய்ந்து, ஆயிரம் முறை தோற்று,தோல்விகண்டுதுவளாமல் மீண்டும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, விஞ்ஞான முறைகளை வகுத்ததன் பலனைக் 'குறைத்தன்னர்-குறைத்துக்கொண்டு வருகின்றனர்.

கோயில் சுற்றும்போதாவது பக்தர்களுக்கு உள்ளே எழுந்தருளியிருக்கும் ஈசனுக்கு அங்கு என்ன பெயர் என்பதுதெரியும். போகாதவர்கள்கூட, ஸ்தலபுராணத்தை அறிவர். அதுபற்றிப் பேசுவர், பாராட்டுவர். ஆனல் ரயிலில் போகும்போதும்நமக்கு அந்தச் சாதனத்தைக் கண்டறிந்தவனின் பெயரும் தெரிவதில்லை,தெரிந்துகொள்ளவேண்டுமென்ற சிந்தனைகூடத்தோன்றுவதில்லை. ரேடியோகேட்போம், அதனைத்தந்தவர் யார் என்று அறியாமல்.தந்தி கொடுப்போம் உடனே புறப்படு என்று,அந்தச் சாதனத்தை நாம் அடையச் செய்தவர் யார் என்று கண்டறியும் எண்ணமும் கொள்ளாமல்! விஞ்ஞானத்தின் முழு உதவியையும், கொஞ்சமும் நன்றி காட்டாமல், உணராமல்கூட, அநுபவிக்கிறோம். அதுமட்டுமா?

இன்று நம்மில் பலர், விஞ்ஞான சாதனங்களை,ஆகாதவை என்றும், ஆபத்தானவை என்றும், தேவைப்படாதவை என்றும் கூடக்கூறத் தொடங்கிவிட்டோம். அதற்குக்காந்தியாரைச் சாட்சிக்குக்கொள்கிறோம்.

விஞ்ஞானத்தின் அருமை பெருமையை அறிந்துகொண்டவர்களாகவோ, மனிதனின் உழைப்பு அதிகமாகப்பாழாக்கப்படுவது கூடாது என்ற பச்சாதாப உணர்ச்சி கொண்டவர்களாகவோநாம் இருந்தால்,நெசவுத்தொழிலுக்குக் கைராட்டையையும்,அரிசிக்குஉரல் உலக்கையையும், இன்றும் தேடுவோமா! தேடுவது "தேசோத்தாரணம்" என்று பேசுவோமா?

இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குமுன்பு நெசவுத் தொழிலில் இருந்த வேலையின்கடினத்தையும் வேதனையையும்போக்கி, மனிதனின் கஷ்டத்தைக் குறைத்து, பலனை அதேபோது அதிகரிக்கச்செய்யும் ,விஞ்ஞானநெசவு முறையைக்கண்டுபிடித்தனர்—கண்டுபிடித்ததை மேலும் மேலும் வளமாக்கினர் வசதியைப்பெருக்கிக் கொண்டனர். இன்று, பழையநாட்களிலே நெசவுத்தொழிலில் ஈடுபட்டவர்கள்பட்டகஷ்டத்தில் சிறுஅளவு கஷ்டம்மட்டுமே பட்டு, பழைய நாட்களில் பெற்ற பலனைப் போல, எத்தனை எத்தனையோ மடங்கு அதிகமான பலனைப் பெற்று வருகிறோம். எவ்வளவு மனித உழைப்பு, நேரக்கேடு குறைக்கப்பட்டிருக்கிறது! மனிதனின் நரம்பு முறிவு எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது. இது தெரிந்தும், இன்று, வீட்டுக்கொரு ராட்டை வைத்துச் சுற்றும் திட்டம் தயாரிக்கவிடுகிறோம் ஆள்பவர்களே. தாங்களே நூற்று, தாங்களே நெய்துகொள்ளவேண்டும் என்று கூறப்படுகிறது. நமது மாகாண முதலமைச்சர், அது மட்டும் போதாது, தங்களுக்குத்தேவையான நூலைநூற்க, பஞ்சுவேண்டுமே அதற்கும், அவரவர்கள் தத்தமது இடத்திலேயேபருத்தியும் பயிரிட்டுக்கொள்வது மிக நல்லது என்று போதிக்கிறார்! எவ்வளவுதூரம்,விஞ்ஞானத்தை விட்டுப்பிரிய இருக்கிறார், பிரகாசம்காரு!

அவரவர்கள் தத்தமது இடத்திலே பருத்தி பயிரிட்டு,அதனைக் கொண்டு அவர்களே நூற்று, நூலைக்கொண்டு ஆடை நெய்து அணிந்துகொள்ளலாம் என்றால், தேவையான அளவு துணிகிடைக்காதே என்று கேட்டால், நமது முதலமைச்சர்— இப்போதல்ல, இன்னும் கொஞ்சம் கோபம் அதிகமானதும் கூறுவார் — வெளியிலே நடமாடினால்தானே துணி அதிகமாகத் தேவைப்படுகிறது. வீட்டோடு இருந்தால், ஆடை அதிகம்தேவைப்படாதல்லவா, ஆகவே வீட்டுக்குள் இரு! என்றும் கூறிவிடுவார்— ஆமாம்! பழங்காலத்திலே, வேட்டையாடவும்குறவைக்கூத்தாடவும், வெளியே சென்ற நேரம் தவிர,மற்றச்சமயத்திலே, குகைகளிலே வாசம் செய்து வந்தார்கள், நமது ஆதிகுடிகள் —அதுபோலிருப்போம் என்று அறவுரை கூறவும் கூடும்.

இவ்வளவுக்கும், இன்று நாம் பெற்றுள்ள விஞ்ஞான வசதி, மற்றநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவோ குறைவு. மற்ற நாட்டுமக்களில் பெரும்பாலானவர்கள், நமது நாட்டு மக்களைப்போல நரம்பு முறியப் பாடுபடுவதில்லை. சென்னைக்கு அருகே உள்ள பல்லாவரத்தைச் சார்ந்த மலைகளில், தொத்திய படியும், நூலேணியில்தொங்கிய படியும், கயிற்றைப் பிடித்தபடியும், காயும் வெயிலைத் தாங்கிய படியும், கல் உடைக்கும் பாட்டாளிகளைப் பாருங்கள்! பாதை ஓரத்தில், கல்உடைக்கும்,பாவையரைப்பாருங்கள்! அவர்களின் உழைப்பு, எவ்வளவு! வேதனை எவ்வளவு!

அமெரிக்கத் தொழிலாசர் போர்டு, 'இன்றப அடிமைகளாக உழைப்பவர்கள் ஆசியாப்பகுதியிலேஉள்ளன' என்றார்.யார் அவர்கள் என்றுகேட்டபோது அவர் சொன்னார், "ஏன்! இன்றும்இந்தியாபோன்ற இடங்களிலே, கல் உடைத்தும், கட்டை வெட்டியும், ஜீவிக்கிற மக்கள் இருக்கிறார்களே. அவர்களின் வாழ்வு, ஒரு அடிமையின் வாழ்வு போன்றதுதானே' என்றார். உலகில் இங்குமட்டுமல்ல, எங்கும் ஆதிநாட்களிலே, மனிதன் சகலவிதமான கடினமான வேலையையும், கஷ்டப்பட்டு,உடலைத் தேயவைத்துக்கொண்டு தான் செய்துவந்தான் — கல் உடைத்தான்—கட்டை வெட்டினன்—வீதி கூட்டினன்—வேதனைப்பட்டான், வாழ! இன்றோ, மேனுடுகளிலே, மனிதன், தன் புத்திபலத்தைக்கொண்டு, விஞ்ஞானத்தைப் பெருக்கிக் கொண்டு, அதன் துணைகொண்டு, இன்று எண்ணற்றகாரியங்களை, மனித உழைப்பைப் பலியிட்டுத் தான் சாதிக்கவேண்டும் என்ற நிலையைமாற்றிக் கொண்டான். உழைப்பைக்குறைத்துக்கொண்டான். அதேபோது, வாழ்க்கையின் வசதிகளையும் பெருக்கிக் கொண்டான்.

இன்று அங்கெல்லாம் மனித உழைப்பின் மூலம் சாதிக்கப்படும் வேலையின் அளவைவிட, மின்சாரம், நீராவி, நிலக்கரி போன்ற "சக்தி"களின் துணை கொண்டுபெறப்படும் வேலையே அதிகம். அதனைத்தான், நவயுகம் முன்னேற்றம், மனிதனின் வளர்ச்சி, நாகரிகம் என்று கருதுகிறார்கள்.

இன்றும், ஒய்வாக இருக்கும் ஆள், நாகரிகமாக வாழ்கிறான், "அடிமைக்காரனுக" உழைப்பவன், புழுதியில்தான் புரளவேண்டி இருக்கிறது. வடபாதி மங்கலத்தாரின் வாழ்க்கையில் கலைமணம் கமழும்—பண்ணையில் வேலை செய்யும் சின்னான் வாழ்விலே,பிணம்வீசுது! அதுபோலவே விஞ்ஞானத்தின் துணையால் மக்களின் உழைப்பின் கடினத்தைக் குறைத்துக்கொண்ட மேனுட்டவரின் வாழ்வு, கலைஒளியுடன் இருக்கிறது, இங்குகவலைஒலியே கேட்கப்படுகிறது. இன்றும் இங்கு, மனித உழைப்பே அதிகம், மற்றச்சக்திகளை விட! உழைப்பு அதிகமே யொழிய, விளைவு பலனைப்பொறுத்தமட்டிலே மிகமிகக்குறைவு! ஏற்றம் இறைக்கும் கழனியில், உழவனின் உழைப்பு அதிகம், இரண்டு மூன்று குதிரை ஓட்டமுள்ள மெஷின்வைத்துத் தண்ணீர் இறைத்துப்பயிரிடும் வயலில், உழவனின் உழைப்புக் குறைவு! பலனோ, அதிகஉழைப்பு இருக்குமிடத்தில் குறைவு, மனித உழைப்புக்குறைந்திருக்கும்இடத்தில் அதிகம், மனிதனுக்குத் தோழனுகவும் துணையாகவும், மெஷின், விஞ்ஞானம் இருப்பதால்.

இதுபற்றி, (1929) ஒரு கணக்கு எடுத்தார்கள், அப்போது நாட்டில் நமது மக்கள் எவ்வளவு வேதனைப் படுகிறார்கள் என்பது உலகுக்குத்தெரிந்தது.

நாட்டிலே, நடைபெறும் எல்லாவிதமானவேலைகளுக்கும், மனித உழைப்பு, நிலக்கரி கொண்டு செய்யப்படும் வேலை, பெட்ரோல் உபயோகித்துச் செய்யப்படும்வேலை, நீர்ன்சக்தி கொண்டு சாதிக்கப்படும் வேலை, என்று பலவாறுகத்தேவைப்படுகிறது. அதன் அளவு பற்றிக் கணக்கெடுத்து இருக்கிறார்கள். இந்தியாவின் கணக்கு, மக்களின் வேதனை எவ்வளவு அதிகம் என்பதைக் காட்டுவதாக இருக்கிறது.

கரைபுரள ஓடிவரும் ஆறுகள், காட்டிடைகாணப்படும்மரவகைகள், பூமிக்கடியில் தூங்கும் கனிப் பொருள்கள், ஆகியவற்றை எல்லாம் விஞ்ஞானத்தின் துணைக்கருவிகளாகக்கொண்டு உலகு முன்னேறுகிறது — மனிதன் மிருகம்போல உழைக்கும் கொடுமையைக்களைந்திருக்கிறது. விஞ்ஞானத்தை முதலாளித்வம், தன் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிராவிட்டால், இன்று உலகு இன்பபுரியாகி இருக்கும். வியர்வை பொழிய, பெருமூச்சுடன்,கடும் வேலை செய்யவேண்டிய அவசியமின்றி, மனிதன், விஞ்ஞான சாதனங்களைக்கொண்டு, மூளை பலத்தால், வேலைசெய்து,இன்று பெறுகிற பலனைவிட எவ்வளவோமடங்குஅதிகமானபலனைப் பெற்று, இப்போது உழைக்கும் அளவு உழைக்காமல், உன்னதமான வாழ்வுபெறமுடியும். விஞ்ஞானம் அதற்கான வழிகளை வகுத்திருக்கிறது. வெளிநாடுகள் அவ்வழி சென்றன—இந்நாடும் வெளிநாட்டுத் தொடர்பின் பயனுக, அந்தப்பாதை ஓரத்திலே நின்றுகொண்டிருக்கிறது, அவ்வழிபோகலாம் என்ற நினைப்புடன். காந்தியார், கூப்பிடுகிறார் 'திரும்பிப்போகலாம்வா! நமக்கு வேண்டாம் அந்த நவயுகம்

(5-ம் பக்கம் பார்க்க)

# வேதனையைப் போக்கியும்.....!

★

பாடுபடாமல் என்ன செய்ய முடியும்?

படிப்பு இல்லை! கஷ்டஜீவனம் தானேசெய்தாகவேண்டும்!

பிழைப்புக்காக உடலை வாட்டும் வேலை செய்பவர்களிடம் இரக்கம் கொண்ட நற்குணவான் இதுபோலக்கூறுவான். மனிதனின் மதிப்பை அறிய மறுக்கும்மாமிசப்பிண்டங்களில் சில, மமதை காட்டும், இரக்கம் கொள்ளாமல்; அவர்களின் பேச்சுவேறு விதமாக இருக்கும். "மடையன்! மண்டையிலேகளிமண் தானே உனக்கு: நீகெட்ட கேட்டுக்கு உனக்கு நாசுக்கான வேலைகிடைக்குமா?" என்று கோபிப்பர். மதத்தைத் துணைக்கழைத்து,மன மயக்கத்தைப் புகுத்துவோர், "என்னப்பா செய்வது? உன் விதி அப்படி இருக்கிறது.யாரை நொந்துகொண்டு என்ன பயன்?" என்று பேசுவர். பேச்சின் போக்கிலே, மாறுதல் இருக்குமே யொழிய அடிப்படையில் இரண்டு உண்மைகள் மூன்று வகையினர் பேச்சிலும் காணலாம்.

1. பலர், பிறர்காணச்சகியாத அளவு பாடுபடுகிறார்கள். கடினமானவேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆபத்து நிறைந்த வேலையிலும் உள்ளனர்.

2. இந்தக்கஷ்டத்தைநீக்குவது எப்படி என்று தெரியவில்லை.

கஷ்டப்படும் மக்களின் விடுதலைக்கு, எதேச்சாதிகாரி வழிவகுப்பதில்லை, எய்த்துப் பிழைப்பவன் மயங்கவைப்பான், மதவாதி மறுஉலகைக்காட்டுவான், ஆனால், இவ்வளவு கஷ்டப்பட்டுத் தான் பிழைக்கவேண்டுமா? மனித அறிவு, இதற்கோர் விடுதலைத்திட்டம் காணக் கூடாதா? வேலை வேதனைஉள்ளதாகத்தான் இருக்க வேண்டுமா? வேதனையைக் குறைக்கவழி இல்லையா? என்ற கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூறவில்லை—விடுதலைக்குவழி கோலவில்லை—இஷ்டமில்லாததால் அல்ல, அவர்களுக்கே தெரியாததால்! விஞ்ஞானம் இந்த வீரப்பணிபுரிந்திடமுன்வந்தது. வேதனையைக் குறைக்க முடியும் என்றுவாக்களித்தது—செய்து காட்டிற்று—எத்தனையோ வகையில்—எவ்வளவோ, ஆச்சரியப்படும் விதத்தில்.

நாலாவது மாடியிலேஇருக்கும் நளினியைக்காணச் செல்லும் காதலன், காதலுக்குக் கட்டுப்பட்டவனானல் கூட, இருநூறுபடிகளை ஏறிச் செல்லும் போது காதலைக்கூடக்கண நேரம்மறந்து. கால் கடுப்பது பற்றி எண்ணிடுவான். மின்சாரம் மூலம் ஏற்பட்ட "ஏற்றிவிடும் இயந்திரம்" இருநூறு படிக்கட்டை ஏறிக் கடக்க வேண்டிய அவசியமான அல்லலை' எவ்வளவு அற்புதமாகக் குறைத்து விட்டது. படிக்கட்டருகே உள்ள சிறுஅறைவடிவிலுள்ள இடத்தில் நிற்கிறான், ஒருபொத்தானை அழுத்துகிறான், மேலே போய்ச் சேருகிறான்! விஞ்ஞானம், மனிதனின் வேலையில்உள்ள கஷ்டத்தை எப்படி எப்படிப் போக்கி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் இது.

ரசமான எடுத்துக்காட்டு கிடக்கட்டும், வேறு நாம் ஆச்சரியப்படும்படியான எவ்வளவோ, காரியங்களை, மனிதனின் வேலையில்உள்ள வேதனையைப் போக்க, விஞ்ஞானம் அளித்திருக்கிறது. கிடைத்து விட்டால்—அதுவும் நாம்கஷ்டப்பட்டுத்தேடாமல் தானகவே கிடைத்து விட்டால்—அனுபவிக்கும் நாம் அதன் அருமையை மறந்துவிடுகிறோம், பெருமையை உணரமறுக்கிறோம், சிறுமைக்குணமுள்ள சிலர், அதிலே பிரமாதம்என்ன இருக்கிறதஎன்றுபேசவும்செய்கிறார்கள். மனித சமுதாயத்தின் அல்லலை, எவ்வளவு குறைத்தது விஞ்ஞானம் என்பதுபற்றிஎண்ணினல், மக்கள் ஆச்சரியப்படுவது மட்டுமல்ல, வீழ்ந்துவணங்கவும் செய்வார்கள், விஞ்ஞானத்தின் முன்பு!

இரத்தம்சுண்ட, நரம்புமுறிய உடல்உருக,கண்மங்க, கைகால் அலுக்க, மனிதன்பாடுபட்டான்—அத்தகைய உழைப்பைக்கேட்டுப்பெற்றஎத்தனை எத்தனையோ காரியங்களில், விஞ்ஞானமுறையில் நடைபெற ஆரம்பித்ததன் பலனாக, மனிதனின் உழைப்பு, வேதனை, எவ்வளவோகுறைந்து மனிதன், மிருகத்தன்மை எனும் சிறையிலிருந்து விடுபட்டான்—

ஆனால் எந்த விஞ்ஞானம் விடுதலை தந்ததோ, அதனை மதிக்கவும் மறந்தான்—இன்றும்மறந்துதான் இருக்கிறான். 5 Wat எலக்ட்ரிக் விளக்கு! சாதாரண விஞ்ஞானப் பொருள். மனிதனின் உழைப்பை எவ்வளவு பாழ்படாதபடி சேமித்துத்தருகிறதுஎன்றுகொஞ்சம்யோசனை செய்து பார்த்தால், அதன் அருமை தெரியும்.

ஒரு சிறுமின் சார விளக்கு தரும் ஒளி அளவுக்கு, ஒளிபெற, நாம், எத்தனை அகல்விளக்குத்தேடவேண்டும், அதற்காக நேரிடும் வேலையின் நேரம், அளவு எவ்வளவு இருக்கும், செலவு எவ்வளவு இருக்கும் என்பதைப் பரீட்சித்துப் பார்த்தால், பிறகு, நமது மக்கள் விஞ்ஞானத்தின் பெருமையை உணர முடியும். எத்தனையோ திவர்த்திகள்கொளுத்திக் கஷ்டத்துடன், வெப்பத்தையும் புகையையும்வேதனையையும்தாங்கிக்கொண்டு பெற்ற, "ஒளி" இன்று, உழைப்பும் நேரச்செலவும் இன்றி,தொட்டதும்கிடைக்கிறது விஞ்ஞானத்தின் உதவியால். வானத்தில் பறப்பது, கடலில் மூழ்கி வெளிவருவது, தொலைவில் நடப்பதைக் காண்பது, கேட்பது, ஆகிய அற்புதங்களைப் பிறகு நினைத்துப்பாருங்கள். அவைகளால்; இன்று மக்கள் பெறக்கூடிய பலன்களில் பத்தாயிரத்தில் ஒரு பாகத்தைப் பெறுவதற்குக்கூட, விஞ்ஞானம் தோன்றுமுன்பு, மனிதன் எவ்வளவு உழைத்திருக்க நேரிட்டிருக்கும் என்பதை. அவ்வளவு உழைப்பையும் மிச்சப்படுத்தி, வேலையின் கடினத்தன்மையைப் போக்கி வேதனையைக் குறைத்திருக்கும்விஞ்ஞானத்தை,விளக்கம் பெறுதார் சாமான்யம் என்று கருதுவதும், அதனல் பெற்ற பலனைக்கூடச் சரியாக மதிப்பிடாமலிருப்பதும் காணும் போது, வியப்பல்ல, கொஞ்சம் கோபமும் வரும் விஷயமுணர்ந்தவர்களுக்கு. குறைத்து மதிப்பிடுவோர்கூட, அதேவிஞ்ஞான சாதனம், கொஞ்ச நேரம் கிடைக்காத போது எவ்வளவு வேதனையும் அதிர்ப்தியும் பரபரப்பும் பெறுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நகைப்பு வரும்! விஞ்ஞானத்தை சர்வ சாதாரணம் என்று கூறுவான், பழயநாட்களின் பெருமைப்பற்றிப்பன்னிப்பன்னிப்பேசுவான், அதே ஆசாமி ஒருநாள் அவன் வாழும் ஊரிலே, மின்சார விளக்கு கெட்டுவிட்டால், போதும், வேதனை அடைவான், ஆயிரம் தடவை ஆயாசமடைவான்! வேலைசெய்து செய்து வேதனையுற்று, தேய்ந்து கொண்டிருந்த மக்களை, விஞ்ஞானம் காப்பாற்றி, அவன் உழைப்பைக் குறைத்து, நேரத்தைக் குறைத்து, செலவையும் குறைத்து, வாழ்க்கையில் முன்புஎண்ணியிருக்க முடியாத வசதிகளைத் தந்து, பொது நலனைவளர்த்தது—வளர்த்துக்கொண்டு வருகிறது.

ஏககாலத்தில், முழுவலிவுடனும் முழுத்திறமையுடனும் ஆயிரம் பேர் சேர்ந்து வேலை செய்தால் மட்டுமே சாதிக்கக் கூடிய ஒருகாரியத்தை, விஞ்ஞானத்தின் உதவிகொண்டு, ஒரே ஆள், மிக எளிதாக, எவ்வளவோ குறைந்த நேரத்தில், இன்று செய்து முடிக்கமுடிகி

(6-ம் பக்கம் பார்க்க)

## திக்கற்ற தேசம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஏன், சென்னை மாகாணத்தில் இத்தகைய, ஒரு ஆராய்ச்சிக் கூடம் அமைக்கக்கூடாது?ஏன்? 'வடநாட்டிலேயே, நாட்டுவாழ்வுக்கு, மூலாதாரமான இந்த ஆராய்ச்சிக்கூடங்கள் அமைக்க இந்திய சர்க்கார்எண்ணுகிறது? சென்னை சிறுமைப்படுத்தப்படுவதற்குக் காரணம் என்ன?மாற்றாந்தாய் கொடுமையா? மன மறிந்த சூதா? ஏமாந்தவர்களை எது செய்தால் என்ன என்ற தைரியமா? அல்லது கைக்குத்தரிசி, கிராமியத் தொழில்அபிவிருத்தி முதலிய ஆராய்ச்சிக் கழகங்கள் மட்டுமே சென்னைக்கு இருக்கவேண்டும் என்று புதிய திட்டமா? யார்கண்டார்கள்? யார் கேட்டார்கள்? யார் கேட்கமுடியும்!

கேட்பாரற்ற நிலை! திக்கற்ற தேசம்!! அதிலே நாம் வாழ்கிறோம்—பிறர் வாழ்வதற்கு உழைக்குமளவு உரம் மட்டும் பெற்று!!

—




உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

## அதோ பண அரசு

2-ம் பக்கம் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் ஆப்பெங்கால் | கல்கத்தா | 10,00,000 |
| சில்க் பில்யேட்சர் கம்பெனி | பம்பாய் | 20 00 000 |
| அசாம் டீ கம்பெனி | கல்கத்தா | 800 000 |
| யூனியன் டுபாகோ கம்பெனி | கல்கத்தா | 700 00 00 |
| குல்தீப் ஆயில் இண்டஸ்ட்ரீஸ் | அம்பாலா | 10,00,000 |
| யுனைடெட் சர்ஜிகல் ஒர்க்கஸ் | சியால்கோட் | 20,00,000 |
| டைம்பிக்சர்ஸ் லிமிடெட் | கல்கத்தா | 25,00,000 |
| பெர்பெக்ஷன்கிளாஸ் ஒர்க்ஸ் | கல்கத்தா | 20,00,000 |
| இண்டியன்மெடல் அண்டு ஸ்டீல் ஒர்க்ஸ் | கல்கத்தா | 10,00,000 |
| ஹாலிக்டிசல் என்ஜின் மான்பு பாக்சரிங் கம்பெனி | லாகூர் | 2500,000 |
| மூன்ஜிலிமிடெட் (கடைகள்) | பம்பாய் | 2,00,00,000 |
| டாவின் கெமிகல் அண்டு பார்மெசுவல் ஒர்க்கஸ் | கல்கத்தா | 10,00,000 |
| அசாம்பெங்கால்காட்டன்மில்ஸ் | கல்கத்தா | 60,00,000 |
| கனிகோ பிராடக்ட்ஸ் | கராச்சி | 21,00,000 |
| இண்டியன் காலியர்ஸ் | கல்கத்தா | 25 00 000 |
| சயன்டிபிக்மில்க்பிராடெக்ட்ஸ் | கல்கத்தா | 10 00,000 |
| டையிங் (சாயம்) அண்டு காலிகோபிரீண்ட்ரஸ் | டில்லி | 25 00,000 |
| டார்ஜிலிங் டேரபய் டீ கார்ப்பரேஷன் | கல்கத்தா | 5.00,000 |
| இன்டர் நேஷனல் ஷேர் (பங்கு)டீலர்ஸ் லிமிடெட் | கல்கத்தா | 5 00,000 |
| இந்துஸ்தான் வுலன் மில்ஸ் | கல்கத்தா | 35,00,000 |
| இந்துஸ்தான் சுஞு அண்டு ஜெனரல் இண்டஸ்ட்ரீலிமிடெட் | டில்லி | 25,00,000 |
| இண்டியா ஜெனரல் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் | கல்கத்தா | 1 00 00,000 |
| பயனியர் டீ கம்பெனி | கல்கத்தா | 12,00 000 |
| கம்பளி டைக்ஸ்டைல் | கல்கத்தா | 25,00,000 |
| ஈஸ்ட் சில்க்மான்யூ பாக்சரிங் லிமிடெட் | கல்கத்தா | 10,00,000 |
| சங்ரீலாபுட் (உணவு) பிராடக்ட்ஸ் லிமிடெட் | பம்பாய் | 50,00 000 |
| சரஸ்வதி சுரங்கக்கம்பெனி | கல்கத்தா | 5,00,000 |
| லாண்டு டிரஸ்ட் ஆப் இந்தியா லிமிடெட் | கல்கத்தா | 7,50,000 |
| சித்தானலா சுரங்கம் | கல்கத்தா | 20,00,000 |
| க்ளோரைன்பிராடக்ட்ஸ் | பம்பாய் | 1,20,00,000 |
| ப்ரீ இண்டியா கெமிக்கல்லாபரடரி | கல்கத்தா | 3,00,000 |
| கிரேட் இண்டியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி | கல்கத்தா | 5,00,00,000 |
| நேஷனல் ஆய்ஸரி மில்ஸ் | பேரார் | 10,00,000 |
| எலக்ட்ரியானிக்ஸ் லிமிடெட் | புதுடில்லி | 50,000,00 |
| இண்டியன் பிளாஸ்டிகஸ் | பம்பாய் | 1000,00 000 |
| ஜெயந்தி டெக்ஸ்டைல்ஸ் | கல்கத்தா | 50,00,000 |
| சிவாஜி ஒர்க்ஸ் லிமிடெட் | ஷோலாப்பூர் | 2,14,000 |
| இண்டியா காப்பி அண்டு டீ டிஸ்டிரிப்யூடர்ஸ் | பம்பாய் | 25.00,000 |
| இண்டோ எனமல் ஒர்க்ஸ் லிமிடெட் | லாகூர் | 5,00,000 |
| சண்டோஜி ஆயில்இண்டஸ்ட்ரீஸ் | புதுடில்லி | 20,00,000 |
| யரீக்கா டெக்ஸ்டைல்ஸ்லிமிடெட் | கல்கத்தா | 30,00,000 |
| குசும் என்ஜினியரிங் கம்பெனி | கல்கத்தா | 25,00,000 |
| கர்னாடக் இண்டஸ்டிரியல் அண்டு பிளைவுட் கம்பெனி | பம்பாய் | 10,00 000 |
| பெங்கால் காட்டன் மில் | கல்கத்தா | 50,00,000 |
| இண்டியன் மினரல்இண்டஸ்ட்ரீஸ் | கல்கத்தா | 5,00 000 |
| இண்டியன் கார்ப்பரேட் கிராபட்ஸ் லிமிடெட் | பம்பாய் | 2,0,00,000 |
| இண்டியன் பார்மிங் அண்டு அலையட் இண்டஸ்ட்ரி(விவசாயமும் அதற்குத்துணையானதொழிலும்) | புதுடில்லி | 5,00,000 |
| தேஜ் இண்டஸ்ட்ரீஸ் | லாகூர் | 10,00,000 |
| சோதிபூர் கண்ணாடி தொழிற்சாலை | கல்கத்தா | 20,00,000 |
| ஜாம் திக்விஜயா சிமிட்டிதொழிற்சாலை | நவாநகர் | 2,00,00,000 |
| டோல்பூர் கண்ணாடித்தொழிற்சாலை | டோல்பூர் ராஜபுதனம் | 10,00,000 |
| சவுத்ரி காட்டன் (பருத்தி) மில் | கல்கத்தா | 7500,000 |
| சால்ட்ரன் & லேபாடரி லிமிடெட் | கல்கத்தா | 5,00,000 |
| அசாம் பவுண்டரி டீ கம்பெனி | கல்கத்தா | 5,00,000 |
| அப்ரேக் சுரங்கத் தொழில் | கல்கத்தா | 25,00,000 |
| நாராயாணன் சாயப்பவுடர் ரசாயனக்கம்பெனி | கல்கத்தா | 40,00,000 |
| ஸ்டாண்டர்டு பாடரி கம்பெனி | பம்பாய் | 25,00,000 |
| குஜராத் மோட்டார் ஹவுஸ் | ஆமதாபாத் | 24,00,000 |
| இந்தியன் நேஷனல் பிக்சர்ஸ் | பம்பாய் | 50,00,000 |
| ஜோக்தா கோல் கம்பெனி | பம்பாய் | 32,00,00 |
| எலக்ட்ரிக் கன்ஸ்ட்ரெக்ஷன் அண்டு எக்விப்மெண்ட் | கல்கத்தா | 50,00,000 |
| சுந்தர்பான்ஸ் அக்ரீகல்ச்சுரல்(விவசாய) | கல்கத்தா | 5,00,000 |
| இண்டியா ரீகன்ஸ்ட்ரக்ஷன் | கான்பூர் | 100,00,009 |
| ஸ்டார் டைக்ஸ்ட்டைல்ஸ் | கல்கத்தா | 50,00,000 |
| பிஜாய் காட்டன் மில்ஸ் | கல்கத்தா | 50,00,900 |
| கெமோ—பார்மா லேபரடரி | பம்பாய் | 10,00,000 |
| இந்துஸ்தான் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் | கல்கத்தா | 5,00,00,000 |
| மோட்டாருரேடியோ மேன்யூபாக்சரிங் | பம்பாய் | 50,00,000 |
| ஸ்வாங்வாலி டீ கம்பெனி | கல்கத்தா | 500,000 |
| பிராட்வே பிக்சர்ஸ் | டில்லி | 25,00,000 |
| பெங்கால் பைன்ஸ்பினிங் & வீவிங்மில் | கல்கத்தா | 50,00,000 |
| ஓரியண்ட்ரூவிடோன் கார்ப்பரேஷன் | கல்கத்தா | 100,00'000 |
| பாரத் ரெப்ரிகேடர் கார்ப்பரேஷன் | நாக்பூர் | 25,00,000 |
| பெஹார் காலியரிஸ் | கல்கத்தா | 25 00,000 |
| பாரத்ஸ்டீம்ஷிப் கம்பெனி | பவநகர் | 3,00,00,000 |

இப்படிப்பலப்பல!எல்லாவித மானதொழில்களும். பால்பண்ணையிலிருந்து படம் பிடிக்கும் தொழில் வரையிலே.

பம்பாய்ப் பகுதிஎற்கனவே முன்னேறி விட்டது—அதாவது மார்வார் குஜராத் பிடியில்சிக்கி விட்டது. இப்போது 'படை எடுப்பு' வங்காளத்திலே! இங்கு துவக்கப்பட்டுள்ள ஏராள்மான கம்பெனிகளில், நூற்றுக்கு-98, முஸ்லீம் அல்லாதாரே! ஒன்றிரண்டு கம்பெனிகளில்,டைரக்டராக ஜனுப் பஸ்லுல்ஹக்கின் பெயர் இருக்கிறது; மற்றதெல்லாம் "ஜீ' க்கள்தான்!

இவ்வளவு புதிய தொழில்களுக்கும், பொதுமக்களின் பணம், வடநாட்டிலிருந்துமட்டுமல்ல, நம்நாட்டிலிருந்தும், ஏராளமாக 'பங்கு' என்றமுறையிலே சேர்ந்திருக்கிறது. நிர்வாகம், அவர்களிடம். இந்தநிர்வாகத்தில் இருப்பவர்கள், ஒரு கம்பெனி இரண்டுகம்பெனிகளில் அல்ல பல கம்பெனிகளிலே, டைரக்டர்களாகவும், சில இடங்களில் பாகஸ்தராகவும், சிலவற்றிலே மானேஜிங் ஏஜண்டுகளாகவும்,சிலவற்றிலே முதலாளிகளாகவும் சிலவற்றுக்கு பாங்கர்களாகவும் உள்ளனர்.

இப்படி வளருகிறது வடநாட்டு முதலாளித்தனம்!! தென்னாட்டுநிலைமை,இன்னம்கொஞ்சகாலத்தில், தேயிலைக்காட்டுக்கு ஒடுவதாக இருக்குமேயன்றி வேறென்ன வாகும்! இதனைஉத்தேசித்துத்தான் நமக்குத்தனித்தாயக உரிமை, தனி அரசு வேண்டுமென்கிறோம். தவறு?

சொல்லவேண்டாம்! யோசியுங்கள்!

அதோ பண அரசு! அதன் ஆட்சியிலே, தமிழர்! உமதுநிலை என்ன, என்று கேட்கிறேன், நானும் ஓர் தமிழனுதலால்!




**கிண்டி குதிரை பந்தயம் ஒழியாதா?**

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.